


**14. 08. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைநகர் டெல்லி செங்கோட்டையில் நாளை தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

2. சுதந்திர தினத்தை ஒட்டி மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

3. முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் தமிழகத்தில் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

4. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில் ஆடிப்பூர தேரோட்டம் இன்று கோலாகலமாக நடைபெற்றது.

5. நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, தஞ்சை, திருவாரூர் நாகை புதுக்கோட்டை சிவகங்கை மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

************

சுதந்திர தினம் – பிரதமர்

நாட்டின் 80-வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுகிறது.

தலைநகர் டெல்லி செங்கோட்டையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி மூவர்ண தேசியகொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின கொண்டாட்டங்களை துவக்கிவைக்கிறார்.

21 குண்டுகள் முழங்க தேசியகொடி ஏற்றப்படும்போது வானிலிருந்து ஹெலிகாப்டர்கள் மூலம் வண்ண பூக்களின் இதழ்கள் தூவப்படுகின்றன.

அதனை தொடர்ந்து பிரதமர் திரு.நரேந்திரமோடி செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களிடம் சுதந்திர தின உரையாற்றுகிறார்.

வந்தே மாதரம் தேசிய பாடலின் 150ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் இந்தாண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது இப்பாடல் இசைக்கப்படுகிறது.

தேசிய மாணவர் படையினரும் எனது பாரதம் தன்னார்வலர்களும் வந்தே மாதரம் தேசிய பாடலை பாடுகின்றனர்.

தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்படுகிறது.

இப்படைகளை சேர்ந்த 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணாக்கர் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றனர்.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்க பல்வேறு தரப்புகளிலிருந்து ஐந்தாயிரம் சிறப்பு விருந்தினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், சிறு குறு நிறுவனங்களுக்கான முத்ரா வங்கி கடன், சாலையோர சிறு வியாபாரிகளுக்கான ஸ்வாநிதி, பாரத் டாக்ஸி ஒட்டுநர்கள் உள்ளிட்டோர் இதில் அடங்குவர்.

சுதந்திர தின கொண்டாட்டங்களை ஒட்டி தலைநகர் டெல்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்வேறு முகமைகளை சேர்ந்த பாதுகாப்பு ஊழியர்கள் பந்தோபஸ்து பணியில் ஈடுபடுகின்றனர்.

செங்கோட்டையை சுற்றி ஆயிரத்திற்கும் மேற்பட்ட சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நாடுமுழுவதும் ரயில், பேருந்து, விமான நிலையங்கள் கோவில்கள், சுற்றுலா தலங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

************

## குடியரசு தலைவர் உரை

முன்னதாக குடியரசுதலைவர் திருமதி திரெளபதி முர்மு நாட்டுமக்களிடையே இன்றிரவு 7 மணிக்கு சுதந்திர தின உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணி, தூர்தர்ஷன் அலைவரிசைகளில் குடியரசு தலைவரின் உரை நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்யப்படும்.

தொடர்ந்து இதன் தமிழாக்கம் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஆகாஷவாணியில் ஒலிபரப்பாகும்.

************

## குடியரசு தலைவர் பதக்கம்

நாட்டின் 80-வது சுதந்திர தினத்தை ஒட்டி 2026-ம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு, ஊர்க்காவல்படை, சீர்த்திருத்தப் பணிகள் உள்ளிட்ட பிரிவுகளை சேர்ந்த ஆயிரத்து 57 பேருக்கு குடியரசு தலைவர் பதக்கங்களை மத்திய உள்துறை அமைச்சகம் இன்று அறிவித்துள்ளது.

இதன்படி 301 பேருக்கு வீர தீர செயல்பதக்கங்களும்,

92 பேருக்கு தகைசால் பணிக்கான குடியரசு தலைவர் பதக்கங்களும்,

664 பேருக்கு சிறந்த சேவைக்கான பதக்கங்களும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலிருந்து குடியரசு தலைவர் தகைசால் பணிக்கான பதக்கத்திற்கு 3 பேரும், உள்துறை அமைச்சகத்தின் சிறந்த பணிக்கான பதக்கத்திற்கு 17 பேரும் என 20 பேர் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் மத்திய புலனாய்வு துறையில் சிறப்பாக சேவையாற்றிய 21 பேருக்கும் குடியரசு தலைவர் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

************

<u>சுதந்திர தினம் - முதலமைச்சர்</u>

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு.சி.ஜோசப் விஜய் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தோருக்கு விருதுகளை வழங்கி கவுரவிக்க உள்ளார்.

************

<u>சுதந்திர தினம் - மாவட்டங்கள்</u>

திருச்சி மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து தியாகிகளை கவுரவிப்பதோடு நல திட்ட உதவிகளை வழங்க உள்ளனர்.

தலைமை செயலகம், சென்னை விமானம் நிலையம் எழும்பூர் ரயில் நிலையம், ரிப்பன் மாளிகை உட்பட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள் உள்ளிட்டவை வண்ணமயமான ஒளி விளக்குகளுடன் காட்சியளிக்கின்றன.

************

கிராம சபை

தமிழகத்தில் சுதந்திர தினத்தை ஒட்டி அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நாளை நடைபெறுகின்றன.

திருச்சி மாவட்டத்தில் 404 கிராம ஊராட்சிகளிலும் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் பொதுமக்கள் பங்கேற்று கிராம ராஜியம் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரத்திக் தாயள் அறிவுறுத்தியுள்ளார்.

************

சுதந்திர தினம் - சென்னை பாதுகாப்பு

சுதந்திர தினத்தை ஒட்டி சென்னை, திருச்சி உள்ளிட்ட மாநிலததின் விமான நிலையத்தில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைகளுக்கு பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

மத்திய தொழில் காவல் படையினரின் கண்காணிப்பு முடுக்கிவிடப்பட்டுள்ளது.

************

இல்லந்தோறும் தேசிய கொடி

நாட்டின் 80ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லந்தோறும் தேசிய கொடி விழிப்புணர்வு பேரணி பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

விருதுநகரில் பிஜேபி சார்பில் நடைபெற்ற மூவர்ண தேசிய கொடி பேரணியில் ஏராளமான குழந்தைகள் சுதந்திர போராட்ட வீரர்களின் வேடமணிந்து பங்கேற்றனர்.

நாமக்கல்லில் நடைபெற்ற பேரணியில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிப்பதாக அஞ்சல் துறை பணியாளர் விக்னேஷ்வரி தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

<u>முதலமைச்சர் பதக்கம்</u>

தமிழ்நாட்டில் சிறப்பாக பணியாற்றிய 5 காவல்துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் சரக காவல்துறை துணை தலைவர் டாக்டர் வி. சசிமோகன்,

சென்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கக காவல் கண்காணிப்பாளர் திருமதி சண்முக பிரியா

கரூர் நகர காவல் நிலைய தலைமை காவலர் திரு.ரவிகுமார் உள்ளிட்டோருக்கு தலா 8 கிராம் எடையுடன் கூடிய தங்க பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்க வெகுமதியும் வழங்கப்பட உள்ளது.

இதேபோல் புலன் விசாரணை பணியில் சிறப்பாக பணியாற்றிய திருச்சி குற்றப்பிரிவு புலனாய்வு துறை துணை கண்காணிப்பாளர் திருமதி அனுஷியா

பெரம்பலூர் கைகளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி சித்ரா உள்ளிட்ட 10 பேருக்கும் சிறப்பு பணிக்கான பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

************

<u>நிர்மல் குமார்</u>

காவிரி விவகாரத்தில் தமிழகத்திற்கான உரிமையை காக்க தமிழக அரசு சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. சி. டி ஆர். நிர்மல் குமார் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனு, வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு வர உள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

************

<u>ஸ்ரீநாத்</u>

மரக்கன்றுகளை நட்டு பொதுமக்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.ஸ்ரீநாத் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தருவை குளம் உரக்கிடங்கு வளாகத்தில் பசுமையாக்கல் திட்டத்தை துவக்கிவைத்து பேசிய அவர், கடந்த 7 ஆண்டுகளில் 206 ஏக்கரில் ஒரு லட்சத்து 88 ஆயிரம் மரக்கன்றுகள் அப்பகுதியில் நடப்பட்டதாக கூறினார்.

மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் 32 ஆயிரத்திற்கும் அதிகமான மரக்கன்றுகள் இதுவரை நடப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆட்சித்தலைவர் திரு.விஷ்ணுமகாஜன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்..

************

<u>கண்டன ஆர்பாட்டம்</u>

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்த படி விவசாயிகளுக்கான பயிர் கடனை த.வெ.க தலைமையிலான தமிழக அரசு முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அஇஅதிமுக சார்பில் கண்டன ஆர்பாட்டங்கள் இன்று நடைபெற்று வருகின்றன.

தஞ்சாவூரில் இன்று நடைபெற்ற ஆர்பாட்டத்தில் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கர்நாடகாவிலிருந்து தமிழகத்திற்குரிய காவிரி நீரை பெற த.வெ.க அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டிய அவர், மேகதாது அணை விவகாரம் தொடர்பாக அனைத்து கட்சி கூட்டத்தை அரசு கூட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தென்காசி தூத்துக்குடி நாமக்கல் காஞ்சிபுரம் திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலும் அஇஅதிமுகவினர் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

************

இருவரி

விழுப்புரம் மாவட்டம் வானூர் பகுதியில் மக்கள் தொடர்பு திட்ட முகாமினை ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கிவைத்தார்.

196 பயனாளிகளுக்கு ஒருகோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை இன்று வழங்கினார்.

************

தேரோட்டம்

ஆடிப்பூரத்தை ஒட்டி ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் திருக்கோவில் தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றதாக எமது விருதுநகர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

அரியலூர் பிரசித்தி பெற்ற பெரியநாயகி அம்மன் ஆலயத்தில் ஆடி வெள்ளியை ஒட்டி, பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய லட்சக்கணக்கான வளையல்களுடன் அம்மன் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

சிறப்பு அபிஷேக தீபாரனைகள் நடைபெற்றன.

************

வானிலை

வளிமண்டலத்தில் காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுவதால் நீலகிரி தேனி திண்டுக்கல் மதுரை தஞ்சை திருவாரூர் நாகை புதுக்கோட்டை சிவகங்கை மாவட்டங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கன

மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராமநாதபுரம் திருச்சி அரியலூர் பெரம்பலூர் கரூர் நாமக்கல் சேலம் ஈரோடு திருவண்ணாமலை கடலூர் கள்ளக்குறிச்சி விழுப்புரம் விருதுநகர் மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

************

<u>டென்னிஸ்</u>

கஸகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், சீனாவின் வாங் இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

************

<u>டென்னிஸ்</u>

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா, ஈக்வடாரின் Excobar இணை – அமெரிக்க இணையை இன்று எதிர்கொள்கிறது.

************